**ஜுன் – 04**

# TNPSC துளிகள்

- இந்தியா முழுவதிலுமிருந்து 15 சிறந்த செவிலியர் நிபுணர்களுக்கு 2025 ஆம் ஆண்டு தேசியப் புளோரன்ஸ் நைட்டிங்கேல் என்ற விருதுகளை இந்தியக் குடியரசுத் தலைவர் வழங்கினார்.
- 99.7% என்ற கல்வியறிவு விகிதத்துடன், ULLAS - நவ் பாரத் சக்சார்த்த காரியக்ரம் (புதிய இந்தியக் கல்வியறிவுத் திட்டம்) திட்டத்தின் கீழ் கோவா மாநிலம் அதிகாரப் பூர்வமாக முழு கல்வியறிவு பெற்றதாக அம்மாநில முதல்வர் அறிவித்துள்ளார்.
- செரீனா வில்லியம்ஸின் மகத்தானத் தொழில்முறை டென்னிஸ் வாழ்க்கைக்கான ஸ்பெயினின் 2025 ஆம் ஆண்டு பிரின்செஸ் ஆஃப் அஸ்டூரியாஸ் பரிசு (Spain's Princess of Asturias Prize) வழங்கப்பட்டுள்ளது.
- சுவிட்சர்லாந்து நாட்டில் நடைபெற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான நோட்வில் உலக தடகள கிராண்ட் பிரிக்ஸ் போட்டியின் ஆடவர் ஈட்டி எறிதல் F42 பிரிவில் இந்தியாவின் மகேந்திர குர்ஜார் 61.17 மீட்டர் தூரம் ஈட்டி எறிந்து உலக சாதனைப் படைத்துள்ளார்.
- போர்ச்சுகல்லின் கிறிஸ்டியானோ ரொனால்டோ தனது கால்பந்தாட்டப் போட்டிகளில் 800 கிளப் கோல்களை அடித்த உலகின் முதல் வீரராக உருவெடுத்துள்ளார்.
- இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஒரு பாடகரும், பாடலாசிரியருமான இராஜ குமாரி அமெரிக்க இசை விருதை (AMA) வென்ற முதல் இந்திய வம்சாவளி இசைக்கலைஞர் என்ற பெருமையினைப் பெற்றுள்ளார்.
- பாலியல் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பாலியல் சுரண்டல் / கடும் துன்புறுத்தல் நிலைமைகளை வெளிக்கொணச் செய்யவும், அவர்களின் சகிப்புத் தன்மையை நன்கு மதிப்பதற்காகவும் ஜுன் 02 ஆம் தேதியானது ஆண்டுதோறும் சர்வதேசப் பாலியல் தொழிலாளர்கள் தினமாக அனுசரிக்கப்படுகிறது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## 7வது மாநில நிதி ஆணையம்

| | | | |
|---|---|---|---|
| (1) | தலைவர் | : | திரு. கே. அலாவுதீன், இ.ஆ.ப., (ஓய்வு) |
| (2) | அலுவல் சாரா உறுப்பினர் | : | திரு. என்.தினேஷ்குமார், மேயர், திருப்பூர் மாநகராட்சி |
| (3) | உறுப்பினர் (அலுவல் வழி) | : | நகராட்சி நிர்வாக இயக்குநர் |
| (4) | உறுப்பினர் (அலுவல் வழி) | : | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் |
| (5) | உறுப்பினர் (அலுவல் வழி) | : | பேரூராட்சிகளின் ஆணையர் |
| (6) | உறுப்பினர்–செயலர் | : | திரு. பிரத்திக் தாயள், இ.ஆ.ப., அரசு துணைச் செயலாளர் (வரவு–செலவு) (முழு கூடுதல் பொறுப்பு), நிதித்துறை. |

- தமிழ்நாடு அரசானது, ஏழாவது மாநில நிதி ஆணையத்தினை அமைத்துள்ளது.
- ஆறாவது ஆணையம் ஆனது 2022 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் ஆளுநரிடம் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது.

- தற்போதைய இந்தக் குழுவானது பல்வேறு நகர்ப்புற மற்றும் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலையை மதிப்பாய்வு செய்து, மாநில அரசு வழங்க வேண்டிய நிதி விநியோகம் குறித்து பொருத்தமான பரிந்துரைகளை வழங்கும்.
- ஓய்வு பெற்ற இந்திய ஆட்சிப் பணி அதிகாரியான K. அலாவுதீன் அதன் தலைவராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- இந்த ஆணையம் 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31 ஆம் தேதிக்குள் தனது அறிக்கையைச் சமர்ப்பிக்கும் என்பதோடு அது 2027 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் தேதி முதல் ஐந்து ஆண்டு காலம் செயல்பாட்டில் இருக்கும்.
- இந்தக் குழுவின் ஒரு அலுவல்சாரா உறுப்பினராக திருப்பூர் மேயர் N. தினேஷ் குமார் இருப்பார்.
- நகராட்சி நிர்வாக இயக்குநர், ஊரக மேம்பாட்டு மற்றும் பஞ்சாயத்து ராஜ் ஆணையர் மற்றும் பேரூராட்சி ஆணையர் ஆகியோர் இந்த ஆணையக் குழுவின் அலுவல்வழி உறுப்பினர்களாக இருப்பார்கள்.
- இந்திய ஆட்சிப் பணி அதிகாரியான பிரதிக் தயால் குழுவின் உறுப்பினர்-செயலராக இருப்பார்.

## நீலகிரியில் மூன்று முக்கிய கண்காட்சி நிகழ்ச்சிகள்


- நீலகிரியில் ஒவ்வோர் ஆண்டும் கோடை விழாவின் ஒரு பகுதியாக மலர் கண்காட்சி, காய்கறிக் கண்காட்சி மற்றும் பழக் கண்காட்சி ஆகிய மூன்று முக்கிய நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன.
- வருடாந்திரப் பழக் கண்காட்சியானது இந்த ஆண்டு அதன் 65ஆம் ஆண்டினை நிறைவு செய்துள்ளது.
- முதல் மலர்க் கண்காட்சியானது 1800 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் நடைபெற்றது.
- முதல் "அதிகாரப்பூர்வ" மலர்க் கண்காட்சி ஆனது 1896 ஆம் ஆண்டில் நடைபெற்றது.
- அதன் பின்னர், மலர்க் கண்காட்சியானது 127 முறை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- இந்த ஆண்டு முதல் தோட்டப் பயிர்க் கண்காட்சியானது மே 30 முதல் ஜூன் 01 ஆம் தேதி வரை நடைபெற்றது.





## தமிழ்நாடு மொத்த உள்நாட்டு உற்பத்தி vs பாகிஸ்தான் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2025

- 2025 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது, சுமார் 341 பில்லியன் டாலராக மதிப்பிடப் பட்டுள்ளதோடு பாகிஸ்தானின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை விட அதிகமாக இது இருப்பதாக கூறப்படுகிறது.

- 2004-05 ஆம் ஆண்டில், பாகிஸ்தானின் பொருளாதாரம் ஆனது சுமார் 132 பில்லியன் டாலராக இருந்தது.
- இது தற்போது 338 பில்லியன் டாலரில் இருந்து 373.08 பில்லியன் டாலராக உள்ளது.
- தமிழ்நாட்டின் பொருளாதாரம் ஆனது, இதே காலக் கட்டத்தில் 48 பில்லியன் அமெரிக்க டாலரிலிருந்து 329 பில்லியன் அமெரிக்க டாலராக உயர்ந்துள்ளது.
- மகாராஷ்டிராவின் பொருளாதாரம் ஆனது 2004-05 ஆம் ஆண்டில் சுமார் 92 பில்லியன் அமெரிக்க டாலரிலிருந்து 2023-24 ஆம் ஆண்டில் 490 பில்லியன் அமெரிக்க டாலராக வளர்ந்துள்ளது.




## அதிக வெப்பத் தாக்க அபாயமுள்ள மாநிலங்கள்




- 2024 ஆம் ஆண்டில் உலகளவில் பதிவான ஒரு வெப்பமான ஆண்டாக இருந்ததால், தமிழ்நாடு தீவிர வெப்பத் தாக்க நிகழ்வுகளால் பாதிக்கப்படும் ஆபத்தில் உள்ளது.
- 2010 ஆம் ஆண்டிற்குப் பிறகு இந்தியாவானது அதன் மிக நீண்ட வெப்ப அலை பாதிப்பு காலத்தை எதிர்கொண்டது.

- அதிகம் முதல் மிகவும் அதிக வெப்பத் தாக்க அபாயம் உள்ள இந்திய மாநிலங்களில் தமிழ்நாடு ஐந்தாவது இடத்தில் உள்ளது.
- தமிழ்நாட்டின் எந்த ஒரு மாவட்டமும் மிகக் குறைந்த அல்லது குறைந்த வெப்பத் தாக்க அபாயம் உள்ள வகைகளின் கீழ் இடம் பெறவில்லை.
- சுமார் 11% மாவட்டங்கள் மிதமான வெப்ப அபாயத்தை எதிர்கொள்கின்றன, அதே நேரத்தில் 43% மாவட்டங்கள் அதிக ஆபத்தில் உள்ளன, மேலும் 46% மாவட்டங்கள் மிக அதிக வெப்பத் தாக்க அபாயத்தில் உள்ள வகையைச் சேர்ந்தவையாகும்.
- நீர், சுற்றுச்சூழல் மற்றும் ஆற்றல் மீதான குழுவால் (The Council on Energy, Environment and Water - CEEW)) வெளியிடப் படும் இந்த அறிக்கையில் ஆந்திரப் பிரதேச மாநிலம் முதல் இடத்தைக் கொண்டுள்ளது.
- கேரளா, மகாராஷ்டிரா மற்றும் கோவா ஆகிய மாநிலங்கள் ஆந்திரப் பிரதேசத்துடன் சேர்ந்து இதில் முதல் இடத்தைப் பகிர்ந்து கொண்டுள்ளன.

# தேசியச் செய்திகள்

## ECINET இணைய தளம்





| Sl. No. | Application | Type | Sl. No. | Application | Type |
|---|---|---|---|---|---|
| 1. | Affidavit Portal | Web | 21. | ERONET2.0 | Web |
| 2. | India A Web | Web | 22. | Voters Service Portal | Web |
| 3. | Results Website | Web | 23. | Service Voters Portal | Web |
| 4. | Election24 (Archive) | Web | 24. | ETPBMS | Web |
| 5. | ECI SVEEP | Web | 25. | NGSP | Web |
| 6. | ECI Website | Web | 26. | Electoral Search | Web |
| 7. | Fembosa | Web | 27. | ERONET App | Mobile |
| 8. | Voicenet | Web | 28. | BLO App | Mobile |
| 9. | Myth Vs Reality | Web | 29. | cVigil App | Mobile |
| 10. | Election Trends TV | Web | 30. | Decider App | Mobile |
| 11. | cVigil Portal | Web | 31. | ENCORE Nodal App | Mobile |
| 12. | EMS | Web | 32. | ESMS App | Mobile |
| 13. | RTI Portal | Web | 33. | Investigator App | Mobile |
| 14. | ENCORE | Web | 34. | KYC App | Mobile |
| 15. | Media Voucher | Web | 35. | Monitor App | Mobile |
| 16. | Suvidha Portal | Web | 36. | Observer App | Mobile |
| 17. | Observer Portal | Web | 37. | Saksham App | Mobile |
| 18. | Election Planning | Web | 38. | Suvidha App | Mobile |
| 19. | IEMS | Web | 39. | Voter Helpline App | Mobile |
| 20. | PPRTMS | Web | 40. | Voter Turnout App | Mobile |

- 'ECINET' என்று பெயரிடப்பட்ட புதியதான ஒரு ஒருங்கிணைந்த முகப்புப் பக்கமானது, பங்குதாரர்களுக்கு அனைத்து விதமான சேவைகளையும் ஒரே இடத்தில் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்து இந்திய தேர்தல் ஆணையத்தால் வெளியிடப் பட்டது.
- பல்வேறு சேவைகளை வழங்குவதற்கு தற்போது 40க்கும் மேற்பட்ட செயலிகள் அல்லது வலைதளங்கள் உள்ளன.
- இந்தத் தளம் ஆனது தற்போதைய சட்டமன்ற இடைத் தேர்தல்கள் மற்றும் வரவிருக்கும் பீகார் சட்டமன்றத் தேர்தலின் போது செயல்படத் தயாராக உள்ளது.

## மாற்றியமைக்கப்பட்ட வட்டி மானியத் திட்டம் 2025/26

- 2025-26 ஆம் ஆண்டிற்காக என மாற்றியமைக்கப்பட்ட வட்டி மானியத் திட்டத்தினைத் (MISS) தொடர்வதற்கு மத்திய அரசு அங்கீகரித்தது.

- MISS என்பது 2006–07 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட ஒரு மத்திய அரசின் திட்டமாகும்.
- இந்த MISS திட்டத்தின் கீழ், தகுதியான கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு 1.5% வட்டி மானியம் வழங்கப்படுவதுடன் விவசாயிகள் கிசான் கடன் அட்டையின் மூலம் 3 லட்சம் ரூபாய் வரை குறுகிய கால கடன்களை 7% மானிய வட்டி விகிதத்தில் பெறுகிறார்கள்.
- கூடுதலாக, கடன்களை உடனடியாகத் திருப்பிச் செலுத்தும் விவசாயிகள் உடனடியாக திருப்பிச் செலுத்துவதற்கான ஊக்கத் தொகையாக (PRI) 3% வரையில் ஊக்கத் தொகை பெற தகுதியுடையவர்கள் ஆவர்.
- கால்நடை வளர்ப்பு அல்லது மீன்வளத்திற்காக வேண்டி பிரத்தியேகமாகப் பெறப்பட்ட கடன்களுக்கு, வட்டி சார்ந்த பலன் 2 லட்சம் ரூபாய் வரை வழங்கப்படும்.
- இயற்கைப் பேரிடர்கள் ஏற்பட்டால், மறுசீரமைக்கப்பட்டப் பயிர்க் கடன்களுக்கு முதல் ஆண்டிற்கு 2% வட்டி மானியம் வழங்கப் படுகின்றன.




## இன்வார் எறிகணை





- பாதுகாப்பு அமைச்சகம் ஆனது பாரத் டைனமிக்ஸ் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து 500 இன்வார் பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டப்பட்ட எறிகணைகளை (ATGM) வாங்கவுள்ளது.
- இன்வார் எறிகணைகள் பீரங்கிகளில் இருந்து ஏவப்படும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளன.

- இந்த எறிகணை 5 கிலோ மீட்டர் வரையிலான நீண்ட தூரத் துல்லியமான தாக்குதல் திறனுக்குப் பெயர் பெற்றது.

## 14 காரீஃப் பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலைகள் 2025–26

- பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழுவானது, 2025-26 ஆம் ஆண்டின் பயிர் பருவத்திற்கான 14 காரீஃப் பயிர்களுக்கான ஒரு குறைந்தபட்ச ஆதரவு விலையை அதிகரிக்க ஒப்புதல் அளித்துள்ளது.
- முந்தைய ஆண்டை விட அதிகபட்ச முழுமையான குறைந்தபட்ச ஆதரவு விலை ஆனது நைஜர்/காட்டு எள் விதைகளுக்கு (குவிண்டாலுக்கு 820 ரூபாய்) பரிந்துரைக்கப் பட்டு உள்ளது.
- அதனைத் தொடர்ந்து கேழ்வரகு/ராகி (ஒரு குவிண்டாலுக்கு 596 ரூபாய்), பருத்தி (ஒரு குவிண்டாலுக்கு சுமார் 589 ரூபாய்) மற்றும் எள் (ஒரு குவிண்டாலுக்கு சுமார் 579 ரூபாய்) ஆகியவற்றிற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.




## இந்தியாவின் முதல் பொட்டாஷ் சுரங்கம்


- இந்துஸ்தான் துத்தநாக நிறுவனம் (HZL) என்பது இராஜஸ்தானில் இந்தியாவின் முதல் பொட்டாஷ் மற்றும் ஹாலைட் தொகுதியையும், உத்தரப் பிரதேச மாநிலத்தில் ஓர் அரிய வகைத் தனிம கூறுகள் (REE) தொகுதியையும் ஏலத்தில் கைப்பற்றியுள்ளது.
- கோல் இந்தியா நிறுவனம் ஆனது, கிராஃபைட் மற்றும் வெனடியம் போன்ற கனிம வளத் தொகுதியைக் கைப்பற்றியுள்ளது.
- பொட்டாஷ் என்பது உரத் தொழில் துறையில், குறிப்பாக NPK உரங்களின் உற்பத்தியில் பயன்படுத்தப்படும் ஒரு முக்கிய கனிமமாகும்.
- இந்தியாவானது தற்போது அதன் பொட்டாஷ் தேவையில் 100 சதவீதத்தினைக் கனடா, பெலாரஸ், ஜோர்டான் மற்றும் தென் கொரியா உள்ளிட்ட நாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறது.
- இதில் HZL நிறுவனம் எனபது உலகின் மிகப்பெரியதான ஒருங்கிணைந்த துத்தநாக உற்பத்தியாளராகவும், வெள்ளி மீதான உற்பத்தியில் உலகின் மிக ஐந்து முன்னணி உற்பத்தியாளர்களில் ஒன்றாகவும் உள்ளது.

- இந்த நிறுவனம் ஆனது சுமார் 40க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு விநியோகம் செய்கிறது மற்றும் இந்தியாவின் முதன்மைத் துத்தநாகச் சந்தையில் தோராயமாக 77 சதவீதப் பங்கினைக் கொண்டுள்ளது.




# சர்வதேசச் செய்திகள்

## அமெரிக்காவில் முதலாவது பருவநிலைத் தாக்கக் கட்டணம் – ஹவாய்




- பருவநிலைத் தாக்கக் கட்டணத்தினை அமல்படுத்திய முதல் அமெரிக்க மாநிலமாக ஹவாய் மாறியுள்ளது.
- சுற்றுச்சூழல் முன்னெடுப்புகளை ஆதரிப்பதற்காக சுற்றுலாப் பயணிகள் மீது புதிய வரியை அறிமுகப்படுத்துகிறது.
- நாட்டின் முதல் பசுமைக் கட்டணம், அந்த மாகாணத்தின் தற்காலிக தங்குமிட வரியை 0.75% அதிகரிக்கும்.
- முன்னர் TAT ((Transient Accommodation Tax) என்ற வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்ட பயணக் கப்பல் பயணிகளும் தற்போது புதிய சட்டத்தின் கீழ் சேர்க்கப்படுவார்கள்.

- புதியப் பசுமைக் கட்டண வரியானது ஒவ்வோர் ஆண்டும் சுமார் 100 மில்லியன் டாலர் வருவாய் ஈட்டும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

## இந்தியா - ஜெர்மனி உத்திசார் கூட்டாண்மையின் 25 ஆம் ஆண்டு நிறைவு


- 2025 ஆம் ஆண்டு மே மாதத்தில், இந்தியா மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகள் தங்கள் உத்திசார் கூட்டாண்மையின் வெள்ளி விழாவை (25 ஆண்டுகள்) கொண்டாடியுள்ளன.
- இரு நாடுகளின் உத்திசார் கூட்டாண்மையானது 2000 ஆம் ஆண்டில் தொடங்கியது.
- இது பருவநிலை மாற்றம் மற்றும் பாதுகாப்பு போன்ற பல்வேறு சமகால உலகளாவியச் சவால்களைச் எதிர்கொள்ளும் வகையில் பரிணமித்து வருகிறது.
- இந்தியாவில் செயல்பட்டு வரும் 2,000க்கும் மேற்பட்ட ஜெர்மனி நாட்டு நிறுவனங்கள் 750,000க்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகளை உருவாக்குகின்றன.
- தற்போது 50,000க்கும் மேற்பட்ட ஒரு அளவில் இந்திய மாணவர்கள் ஜெர்மனியில் கல்வி பயின்று வருகின்றனர், எனவே இந்தியா அந்நாட்டில் மிகப்பெரிய சர்வதேச மாணவர் விகிதத்தைக் கொண்டுள்ளது.
- இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, ஜெர்மனியுடன் அரசுமுறை உறவுகளை ஏற்படுத்திய முன்னணி நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும்.
- மேலும் ஐரோப்பாவில் இந்தியாவின் மிகப்பெரிய ஒரு வர்த்தகப் பங்களிப்பாளராகவும் ஜெர்மனி உள்ளது.




## சர்வதேசக் காவல் துறையின் வெள்ளி அறிக்கை


- பிரான்சு நாட்டின் முன்னாள் தூதரக அதிகாரியான சுபம் ஷோகீனின் உலகளாவிய சொத்துக்களைக் கண்காணிப்பதற்காக இந்தியா விடுத்த ஒரு கோரிக்கையின் பேரில் சர்வதேச காவல் துறையானது தனது முதல் வெள்ளி அறிவிப்பினை/அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- இதற்கு முன்னதாக, அவரது இருப்பிடத்தைக் கண்டறிய மத்தியப் புலனாய்வுத் துறை ஒரு நீல அறிக்கையினையும் வெளியிட்டுள்ளது.

- சமீபத்தில் சர்வதேசக் காவல் துறை அமைப்பினால் அறிமுகப்படுத்தப் பட்ட இந்த வெள்ளி அறிக்கையானது, வண்ணக் குறியீடு கொண்ட ஒரு அறிக்கையாகும்.
- இது உலகம் முழுவதும் உள்ள சட்டவிரோதமானச் சொத்துக்களின் செயல்பாடுகளைக் கண்காணிப்பதை நோக்கமாகக் கொண்டதாகும்.
- இந்த முன்னெடுப்பில் பங்கேற்கும் நாடுகளில் இந்தியாவும் ஒன்றாக உள்ளது.
- மிகவும் குறிப்பிடத்தக்க ஒரு வகையில், முதல் வெள்ளி அறிக்கையானது இத்தாலியின் வேண்டுகோளின் பேரில் வெளியிடப்பட்டது.
- மற்றொரு வழக்கில், இந்திய அமலாக்கத் துறையின் வேண்டுகோளின் பேரில் அமித் மதன்லால் லகன்பாலுக்கு எதிராக வெள்ளி அறிக்கை வெளியிடப் பட்டது.




# பொருளாதாரச் செய்திகள்

## 2024/25 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் நிதிப் பற்றாக்குறை




- மத்திய அரசின் நிதிப் பற்றாக்குறையானது, 15.77 லட்சம் கோடி ரூபாயாக அல்லது திருத்தப்பட்ட வருடாந்திர இலக்கில் 100.5% ஆக உள்ளது.
- சமீபத்திய எண்ணிக்கையானது 2024 ஆம் நிதியாண்டில் பதிவு செய்யப்பட்ட சுமார் 16.54 டிரில்லியன் டாலரை விடக் குறைவு என்பதோடு ஆண்டிற்கான மதிப்பீடுகளில் இது 95.3% ஆகும்.

- மொத்தச் செலவினம் ஆனது 46.56 லட்சம் கோடி ரூபாயாக இருந்தது என்பதோடு இது இந்த நிதியாண்டின் திருத்தப்பட்ட நிதிநிலை ஒதுக்கீடு இலக்குகளில் 98.7% ஆகும்.
- மத்திய அரசின் நிதிப் பற்றாக்குறை இலக்கானது 2024-25 ஆம் ஆண்டிற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 4.8% ஆக இருந்தது, மேலும் 2025-26 ஆம் ஆண்டிற்கு 4.4% ஆகக் குறைக்கப்பட்டது.
- 30.36 லட்சம் கோடி ரூபாயாக இருந்த வருவாய் வரவுகளில், வரி வருவாய் 24.99 லட்சம் கோடி ரூபாயாகவும், வரி சாராத வருவாய் 5.38 லட்சம் கோடி ரூபாயாகவும் இருந்தது.

## 2024-2025 ஆம் நிதியாண்டிற்கான இந்தியாவின் அந்நிய நேரடி முதலீடு




- 2024–25 ஆம் நிதியாண்டில் இந்தியாவானது சுமார் 81.04 பில்லியன் அமெரிக்க டாலர் (தற்காலிக மதிப்பீடு) மதிப்புள்ள அந்நிய நேரடி முதலீட்டைப் பெற்றுள்ளது.
- இது முந்தைய ஆண்டில் பதிவான 71.28 பில்லியன் அமெரிக்க டாலர்களிலிருந்து 14% அதிகரிப்பைப் பிரதிபலிக்கிறது.
- 2024–25 ஆம் நிதியாண்டில் மொத்த வரவில் 19% பங்குடன், சேவைத் துறையே அதிக அந்நிய நேரடி முதலீட்டைப் பெற்ற துறையாக உருவெடுத்தது.
- இந்தத் துறையானது 2023–24 ஆம் நிதியாண்டில் பெற்ற 6.64 பில்லியன் அமெரிக்க டாலர்களிலிருந்து 40.77% அதிகரித்து, 9.35 பில்லியன் அமெரிக்க டாலர்களைப் பெற்று உள்ளது.
- அதைத் தொடர்ந்து கணினி மென்பொருள் மற்றும் வன்பொருள் துறை ஆகியன 16% முதலீட்டினையும், வர்த்தகம் 8% முதலீட்டினையும் பெற்றது.
- இந்திய மாநிலங்களில், மகாராஷ்டிரா 39% பங்குடன், அதிக அளவு FDI பங்கு வரவைப் பெற்றுள்ளது, அதனைத் தொடர்ந்து கர்நாடகா (13%) மற்றும் டெல்லி (12%) உள்ளது.
- முதலீட்டிற்கான மூல ஆதார நாட்டின் அடிப்படையில், மொத்த FDI வரவில் சிங்கப்பூர் 30% பங்கினையும், அதைத் தொடர்ந்து மொரிஷியஸ் 17% மற்றும் அமெரிக்கா 11% பங்கினையும் அளித்துள்ளன.


# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## இந்தியாவின் முதல் மரபணு திருத்தப்பட்ட செம்மறி ஆடுகள்

- ஜம்முவில் உள்ள ஷெர்-இ-காஷ்மீர் வேளாண் அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக் கழகம் (SKUAST) இந்தியாவின் முதல் மரபணுத் திருத்தப்பட்ட செம்மறி


ஆடுகளை உருவாக்கியுள்ளது.

- CRISPR-Cas9 என்ற ஒரு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இதன் மரபணுத் திருத்தம் செய்யப் பட்டது.
- இதே குழுவானது இதற்கு முன்னதாக 2012 ஆம் ஆண்டில் 'நூரி' எனும் இந்தியாவின் முதல் பாஷ்மினா செம்மறி ஆட்டினை உயிரியல் படியெடுப்பு நுட்பம்/ குளோன் மூலம் உருவாக்கியது.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## டெல்லியில் வில் வடிவ ரேடார் சமிஞ்கை




- டெல்லியைத் தாக்கிய தீவிரப் புயல் ஆனது இந்திய வானிலை ஆய்வுத் துறையின் (IMD) வானிலை ரேடார் வரைபடங்களில் அசாதாரண வடிவத்தில் தோன்றியது.
- இந்தப் புயல் ஆனது பிறை அல்லது ஒரு வில் போல இருந்தது.
- தொழில்நுட்ப ரீதியாக, புயல்களின் இத்தகைய விளக்கக்காட்சிகள் ஆனது "Bow Echos" என்று அழைக்கப்படுகின்றன.
- Bow Echos என்பது பெரும்பாலும் அழிவுகரமான காற்றுப் புயல்களுக்கு முன்னோடியாக உள்ளன.
- ஒரு Bow Echos ஆனது 20 கிலோ மீட்டர் முதல் 100 கிலோ மீட்டர் வரை நீண்டிருக்கலாம்

என்பதோடு அது மேலும் மூன்று முதல் ஆறு மணி நேரம் வரை நீடிக்கும்.

- ❖ இந்தச் சொல்லானது 1970 ஆம் ஆண்டுகளில் புயல்களை வகைப்படுத்துவதற்கான அளவை உருவாக்கிய ஜப்பானிய அமெரிக்க வானிலை ஆய்வாளரான டெட் ஃபுஜிடா என்பவரால் முதலில் உருவாக்கப்பட்டது.
- ❖ மழையால் குளிரூட்டப்பட்டக் காற்று தரையில் இறங்கி, கிடைமட்டமாக பரவுகிறது.
- ❖ இது நிகழும் போது, மழையால் குளிரூட்டப்பட்டக் காற்றுக்கும் தரையின் மேற்பரப்பில் உள்ள வெப்பமான ஈரப்பதமிக்க காற்றுக்கும் இடையில் காற்று முகப்பு எனப்படும் ஒரு எல்லை உருவாக்கப்படுகிறது.
- ❖ இந்த முகப்பு ஆனது, வெப்பமான ஈரப் பதமிக்க காற்றை வளிமண்டலத்தில் மேலே தள்ளி, புதிய இடியுடன் கூடிய மழையை உருவாக்குகிறது.
- ❖ இந்தப் புதிய இடியுடன் கூடிய மழை மிக அதிக மழைப் பொழிவினை உருவாக்குகிறது, இதன் மூலம் அதிக மழையினால் குளிர்ந்த காற்று உருவாகுகிறது, இது காற்று முகப்பு அதன் வலிமையைப் பேண உதவுகிறது.
- ❖ இந்தச் செயல்முறையானது மீண்டும் மீண்டும் நிகழ்வாதால், புயல்களின் உருவாக்க கோட்டின் பின் பக்கத்தில் காற்று உள்வரும் ஒரு பகுதி உருவாகி, அதை ஒரு வில் போல வளைக்கிறது.
- ❖ புதிய இடியுடன் கூடிய மழையானது முன்பக்கத்தில் உருவாகி, வலுவான காற்றுடன் இந்த அமைப்பு மேலும் வளரவும் முன்னேறவும் உதவும் வரை இந்த சுழற்சி நீடிக்கும்.

## ஆமை வளங்காப்பிற்கான நாகசங்கர் கோவில் மாதிரி

- ❖ வடகிழக்கு அசாமின் பிஸ்வநாத் மாவட்டத்தில் உள்ள நாகசங்கர் கோவிலானது ஆமை வளங்காப்பிற்கான மாதிரிக் கோவிலாக நியமிக்கப்பட்டுள்ளது.
- ❖ ஆமைகள் மிகவும் பாரம்பரியமாக அசாமின் பல கோயில் குளங்களில் வளங்காக்கப் படுகின்றன.
- ❖ நாகசங்கர் ஆமை வளங்காப்புத் திட்டம் ஆனது, 13 வகையான நன்னீர் ஆமைகளைப் பாதுகாக்கிறது.
- ❖ ஆமைகள் இறந்த மற்றும் சிதைந்த பொருட்களை உட்கொள்வதன் மூலம் தண்ணீரைச் சுத்தமாக வைத்திருக்கவும் உதவுகின்றன என்பதால் ஆமைகள் நீர்வாழ் சுற்றுச்சூழல் அமைப்பின் கழுகுகள் என்று அழைக்கப்படுகின்றன.





## புதிய குகை வாழ் மீன் இனங்கள் – மேகாலயா

- ❖ மேகாலயாவில் ஸ்கிஸ்டுரா டென்சிக்லாவா என்ற புதிய குகை வாழ் மீன் இனம் ஆனது

கண்டறியப்பட்டுள்ளது.

- இந்தக் கண்டுபிடிப்பு மௌசின்ராம் அருகே அமைந்துள்ள க்ரெம் மௌஜிங்பூயின் எனும் ஒரு குகையில் கண்டறியப்பட்டுள்ளது.
- இது வடகிழக்கு இந்தியாவிலிருந்து கண்டறியப்பட்ட ஒன்பதாவது புதிய மீன் இனம் ஆகும்.
- மேலும், இது மேகாலயாவில் அறியப்பட்ட, ஆறாவதாகக் கண்டறியப்பட்ட குகை வாழ் மீன் ஆகும்.
- பெரும்பாலான குகை வாழ் மீன்கள் பல தலைமுறைகளாகத் தங்கள் பார்வைத் திறன் மற்றும் நிறமியை இழக்கின்றன என்பதால் இவை மிகவும் இருண்ட நீர்ப் பகுதியில் இயங்குவதற்கு காட்சி/பார்வை சாராதப் புலன்களைச் சார்ந்துள்ளன.
- உலகளவில் மேகாலயா குகைகள் அதிகம் காணப்படும் பகுதிகளில் ஒன்றாகும் என்ற ஒரு நிலையில் இங்கு 1,700க்கும் மேற்பட்ட ஆவணப்படுத்தப்பட்ட குகைகள் உள்ளன.




# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## வால்மீகி தாப்பர்




- இந்திய வனவிலங்கு வளங்காவலர் மற்றும் புலிகளுக்கான பாதுகாப்பிற்கு என்று குரல் கொடுக்கும் நாட்டின் ஆர்வலர்களில் ஒருவரான புது தில்லியினைச் சேர்ந்த வால்மீக்

தாப்பர் காலமானார்.

- 'Tiger My Life, Ranthambhore and Beyond' உட்பட வனவிலங்குகள் மற்றும் அதன் வளங்காப்பு குறித்த இரண்டு டஜன் புத்தகங்களை அவர் எழுதியுள்ளார்.
- "Land of the Tiger" (1997) என்ற BBC தொடர் உட்பட பல முக்கிய வனவிலங்கு ஆவணப் படங்களையும் தாப்பர் வழங்கியுள்ளார்.
- 1987 ஆம் ஆண்டில், உள்ளூர்ச் சமூகங்களை பல்வேறு வளங்காப்பு முன்னெடுப்புகளில் ஒருங்கிணைப்பதற்காக வேண்டி பணியாற்றிய ஒரு இலாப நோக்கற்ற நிறுவனமான இரந்தம்பூர் அறக்கட்டளையை தாப்பர் நிறுவினார்.

## உலக அழகிப் போட்டி 2025




- தாய்லாந்தின் ஓபல் சுச்சாட்டா சுவாங்ஸ்ரீ தெலுங்கானாவின் ஐதராபாத்தில் 2025 ஆம் ஆண்டிற்கான உலக அழகியாக முடிசூட்டப்பட்டுள்ளார்.
- உலக அழகிப் போட்டியில் தாய்லாந்து நாட்டினைச் சேர்ந்தவர் பெற்ற முதல் வெற்றி இதுவாகும்.
- கடந்த 28 ஆண்டுகளில் இந்த நிகழ்வை இந்தியா நடத்தியது இதுவே முதல் முறை ஆகும்.
- இதற்கு முந்தைய உலக அழகிப் போட்டியானது 1996 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் நடைபெற்றது.
- இந்தியா இதுவரை ஆறு முறை உலக அழகிப் பட்டத்தை வென்றுள்ளது.

# முக்கிய தினங்கள்

## உலகப் பால் தினம் 2025 - ஜூன் 01

- இந்தத் தினமானது, பால் ஆனது கோடிக்கணக்கான மக்களை ஊட்டமளிக்கின்ற ஒரு முக்கியமான, மிகவும் அணுகக்கூடிய வகையிலான உணவு ஆதாரமாக விளங்குகிறது என்பதை எடுத்துக்காட்டுகிறது.
- ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண் அமைப்பு (FAO) ஆனது 2001 ஆம் ஆண்டில் பால் தினத்தை அறிவித்தது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு: "Let's Celebrate the Power of Dairy" என்பது

ஆகும்.

- 1998 ஆம் ஆண்டு முதல் இந்தியா பால் உற்பத்தியில் முதலிடத்தில் உள்ளது.
- இந்தியா தற்போது உலகின் பால் உற்பத்தியில் 25 சதவீதத்தை உற்பத்தி செய்கிறது.




## தெலுங்கானா தினம் 2025 - ஜூன் 02

- 2014 ஆம் ஆண்டு ஜூன் 02 ஆம் தேதியன்று, இந்திய மாநிலமான ஆந்திரப் பிரதேசம் என்பதிலிருந்து தெலுங்கானா உருவாக்கப்பட்டது.
- 2014 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் ஆந்திரப் பிரதேச மறுசீரமைப்பு மசோதா என்ற ஒரு மசோதாவானது நிறைவேற்றப் பட்டது.
- பத்து ஆண்டுகளுக்கு ஆந்திரா மற்றும் தெலுங்கானா ஆகிய இரண்டிற்கும் கூட்டுத் தலைநகராக ஐதராபாத் தேர்ந்தெடுக்கப்பட்டது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★